Aபிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

06 10 2025 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இருமல் மருந்துகள் கவனத்துடன் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யுமாறு, அனைத்து மாநில அரசுகளையும் மத்திய சுகாதாரத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.
- BSNL நிறுவனத்தின் 4-G கட்டமைப்பு, அடுத்த 6 மாதங்களில் 5-G கட்டமைப்பாக மேம்படுத்தப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன், தமிழகம் முழுவதும் சாலை சீரமைப்புப் பணிகளை முடிக்க அறிவுறுத்தப்பட்டிருப்பதாக நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு கூறியுள்ளார்.
- தமிழகத்தில் மலைவாழ் மக்களுக்கான நலத்திட்டங்கள் முழுமையாக செயல்படுத்தப்படவில்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.
- உலகக்கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 88 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இருமல் மருந்து கவனத்துடன் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யுமாறு, அனைத்து மாநில மற்றும் யூனியன்பிரதேச அரசுகளை, மத்திய சுகாதாரத் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

மத்தியப்பிரதேச மாநிலம் சிந்த்வாரா பகுதியில் Coldriff இருமல் மருந்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் உயிரிழந்த சம்பவத்தையடுத்து, புதுதில்லியில், மத்திய சுகாதாரத் துறை செயலாளர் புன்யா சலிலா ஸ்ரீவஸ்தவா தலைமையில் உயர்மட்டக் கூட்டம் நடைபெற்றது.

சுகாதார அமைச்சகம், தேசிய மருந்துக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் மாநில சுகாதாரத் துறை அதிகாரிகள் பங்கேற்ற இக்கூட்டத்தில், நாட்டிலுள்ள அனைத்து மருந்து தயாரிப்பாளர்களும், மருந்துக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை முறையாக பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளையில், மாநில அரசுகளும், கண்காணிப்பை தீவிரப்படுத்துவதுடன், இதுபோன்ற பிரச்சினை ஏற்படும்போது, ஒருங்கிணைந்து பணியாற்றுமாறும் மத்திய சுகாதாரத்துறை வலியுறுத்தியுள்ளது.

<<<<>>>>

BSNL நிறுவனத்தின் 4-G கட்டமைப்பு, அடுத்த 6 முதல் 8 மாதங்களுக்குள், 5-G கட்டமைப்பாக மேம்படுத்தப்படும் என்று, தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் மாநாடு ஒன்றில் பேசிய அவர், இந்தியா 4G தொழில்நுட்பத்தை உள்நாட்டிலேயே உருவாக்கி இருப்பது நாட்டின் கண்டுபிடிப்பு திறனை வெளிப்படுத்துவதாக உள்ளது என்றார்.

அடுத்தகட்டமாக எதிர்கால தொழில்நுட்ப தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நாடு முழுவதும் 5G சேவைக்கான செல்ஃபோன் கோபுரங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, உலகளாவிய சவால்களை வாய்ப்புகளாக மாற்றி தொழில்துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

பொதுத்துறை நிறுவனமான BSNL-ன் சந்தாதாரர் எண்ணிக்கை கடந்த ஓராண்டு காலத்தில் 78 லட்சத்தில் இருந்து 2 கோடியே 20 லட்சமாக அதிகரித்திருப்பதுடன், 17 ஆண்டுகளுக்குப் பிறகு லாபம் ஈட்டியிருப்பதாகவும் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

<<<<>>>>

வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன், தமிழகம் முழுவதும் சாலை சீரமைப்புப் பணிகளை முடிக்க ஒப்பந்ததாரர்கள் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பணிகள் முடிவுறாத இடங்களில் உரிய தடுப்புகள் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

தமிழகம் முழுவதும் உள்ள 66 ஆயிரம் கிலோ மீட்டர் நீள நெடுஞ்சாலைகளில் அவ்வப்போது சாலை பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மழைக்காலம் என்பதற்காக பணிகள் நிறுத்தப்படவில்லை என்றும் திரு. எ.வ. வேலு தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி இருப்பதாக தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், மாநிலத்தில் மதுபானம் மற்றும் போதைப்பொருட்கள் புழக்கம் அதிகரித்துள்ளதால் மாணவர்களும், இளைஞர்களும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

மாநில அரசின் அலட்சியம் காரணமாக விவசாயிகளுக்கான இழப்பீடு இன்னும் கிடைக்காமல் இருப்பதாக கூறிய திருமதி பிரேமலதா, இம்மாவட்டத்தில் வாசனை திரவியம் மற்றும் மாங்கூழ் தயாரிப்புத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

<<<<>>>>

தமிழகத்தில் மலைவாழ் மக்களுக்கான நலத்திட்டங்கள் முழுமையாக அமல்படுத்தப்படவில்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திருமதி பிருந்தா காரத் கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் மாநாட்டில் பேசிய அவர், நில உரிமை கோரி 37 ஆயிரத்துக்கும் அதிகமான பழங்குடியின மக்கள் மனு அளித்திருப்பதாகவும், இவற்றில் பாதியளவு கூட மாநில அரசால் ஏற்கப்படவில்லை என்று குற்றம் சாட்டினார்.

மலைவாழ் மக்களுக்கான சட்டங்களையும், உரிமைகளையும் அமல்படுத்தி அவர்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்றும் திருமதி பிருந்தா காரத் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

புத்தக வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தருமபுரியில் நடைபெற்ற புத்தக கண்காட்சியை பள்ளி மாணவர்கள் மற்றும் போட்டித் தேர்வர்கள் உட்பட 13 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பார்வையிட்டுள்ளனர்.

கடந்த மாதம் 26ஆம் தேதி தொடங்கி நேற்று வரை நடைபெற்ற இந்தத் கண்காட்சியில் சுமார் 48 லட்சம் ரூபாய் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனையாகி இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பாரம்பரிய அரிசிவகைகள், சிறுதானியங்கள், கீரை மற்றும் பழங்களின் பயன்கள் குறித்த பாரம்பரிய வேளாண் திருவிழா திருப்பத்தூரில் நடைபெற்றது.

இதில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த உணவு வகைகள் குறித்து பார்வையாளர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

***<u>இருவரிச் செய்திகள்</u>***

காஸாவில் பிடித்து வைக்கப்பட்டள்ள பிணைக் கைதிகள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பங்களாதேஷில் டெங்கு காய்ச்சலுக்கு நேற்று ஒரேநாளில் 9 பேர் பலியாகி உள்ள நிலையில் இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 212ஆக அதிகரித்துள்ளது.

<<<<>>>>

மணிப்பூரின் Jiribam மாவட்டத்தில் 2 சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதன் மூலம் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டிருப்பதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

விசாகப்பட்டினம் கடற்கரையில் குளித்த இத்தாலி நாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

<<<<>>>>

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரி மும்பை ஐ.ஐ.டி-யுடன் இணைந்து நடத்திய மருத்துவ தொழில்நுட்பம் குறித்த ஹேக்கத்தான் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற 3 குழுக்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

<<<<>>>>

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் முன்பாக, வணிக ரீதயாக கடைகள் கட்டப்படுவதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கின்பேரில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் கோவிலில் நேரில் ஆய்வு செய்தனர்.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

சென்னை மாநகராட்சி இந்திய கடலோர காவல்படையுடன் இணைந்து கடற்பகுதியில் எண்ணெய்க் கசிவை தடுப்பதற்கான ஒத்திகையை இன்று மேற்கொள்கிறது.

<<<<>>>>

சென்னை வண்டலூர் உயிரியல் பூங்காவில் மாயமானதாக கூறப்பட்ட சிங்கம், பூங்கா வளாகத்தில் இருப்பதை மீட்புக் குழுவினர் உறுதிப்படுத்தியிருப்பதாக தமிழக வனத்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னை மெரினா கடற்கரையில் சீரமைக்கப்பட்ட நீச்சல் குளம் நாளை முதல் மீண்டும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறக்கப்படும் என்று மாநகராட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 88 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி பந்துவீச தீர்மானித்ததையடுத்து முதலில் பேட் செய்த இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 247 ரன் எடுத்தது.

248 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 43 ஓவரில் 159 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<>>>>

புதுதில்லியில் நடைபெற்ற உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா 6 தங்கம், 9 வெள்ளி, 7 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<>>>>

Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் - ஹரிஹரன் அம்சகருணன் இணை பட்டம் வென்றது.

<<<<>>>>